**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

M.C.O.P. No.14/2024

DEPOSITION OF WITNESS FOR PW-4

NAME : திரு.பரமசிவம்

Father/ Husband NAME : திரு.பலவேசம்

VILLAGE : முத்தையபாபுரம்

TALUK : தூத்துக்குடி

CALLING : மனுதாரரர் தரப்பு சாட்சி

AGE : 55

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of October 2025.

முதல் விசாரணை :–

நான் இம்மனுவில் 3ம் நபர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் சா.சா.ஆ.5.

**2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

விபத்தில் இறந்துபோன செந்தில்குமார் எனது உறவினர் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் ரோடு தென்வடல் ரோடு என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் பேருந்திற்கு நான் பின்னால் இருசக்கர வாகனத்தில் சென்றேன். நான் என்னுடைய முதல் விசாரணையில் சொன்னபடி விபத்து எதுவும் நடைபெறவில்லை என்றும், விபத்தில் இறந்துபோன செந்தில்குமார் எனக்கு உறவினர் என்பதால்

பார்க்க விபத்தை பார்த்தாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னபடி 1ம் எதிர்மனுதாரர் ஆம்னிபஸ்சின் லக்கேஜ் பாக்ஸ் கதவு முடாமல் திறந்தநிலையில் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் சாலை விதிகளை அனுசரித்து மெதுவாக தான் சென்றார் என்றும் விபத்தில் இறந்த நபர்கள் தான் தனக்கு பின்னால் வரும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை கவனிக்காமல் திடீரென வலதுபக்கமாக திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு இறந்தவர்கள் தான் முழுக்காரணம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் இந்த விபத்திற்கு காரணம் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

I Additional District Judge,
Tirunelveli.